பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 10 புதன்கிழமை (22-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 146

# கடற் போர் வல்லமையிலும் புலிகளின் திறன் நிகரற்றது!

## இந்திய - இலங்கை கடற்படைகள் இணைந்தும் வெல்ல முடியவில்லை

சென்னை, ஏப்ரல் 22

கடற் போர் வல்லமையிலும் விடுதலைப் புலிகளின் திறன் நிகரற்றது.

இலங்கை - இந்திய கடற்படைகள் கூட்டாக இயங்கி ஒத்துழைத்த போதிலும் விடுதலைப் புலிகளின் வழமையான கடற் போக்குவரத்தைத் தடை செய்ய முடியவில்லை

அதற்கும் மேலாக கடற்புலிகள் அதிரடித் தாக்குதல்களை நடத்தி இலங்கைக் கடற்படையினரின் பல கப்பல்களை மூழ்கடித்தும், சேதப்படுத்தியும் உள்ளனர்.

இவ்வாறு பி.பி.சியின் சென்னைச் செய்தியாளர் சாம் ராஜப்பா தனது விமர்சனக் கட்டுரை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்;

அவரது விமர்சனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 2 ஆண்டுகளில் இலங்கை கப்பற்படையினரின் பல கப்பல்கள் புலிகளின் கண்ணி வெடிகளால் அல்லது தற்கொலைப் படையினரால் செலுத்தப்பட்ட வெடிமருந்து

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மன்னாரில் ஊரடங்கு

கொழும்பு, ஏப். 22

மன்னார் மாவட்டத்தில் மன்னார் தீவு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் நாளை காலை 6-00 மணியிலிருந்து நாளை மறுதினம் காலை 6-00 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படும் என்று கூட்டுப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. [உ-10]

## மூளைக்காய்ச்சலுக்கு சிகிச்சை:

## மற்றொரு சிறுவனுக்கும் கை துண்டிக்கப்பட்டது

### யாழ். ஆஸ்பத்திரியில் அவலம்

மூளைக் காய்ச்சலுக்காக யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த மற்றுமொரு சிறுவனுக்கும் வலது கை முற்றாகத் துண்டிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் கோவிலடியைச் சேர்ந்த ராசா தில்லைராசா [வயது 10] என்ற சிறுவனின் கையே நேற்று அறுவை சிகிச்சையின் மூலம் துண்டிக்கப்பட்டது.

மூளைக் காய்ச்சல் நோய்க்காக கடந்த மார்ச் 19 ஆம் திகதி முதல் யாழ் ஆஸ்பத்திரியில் இச்சிறுவன் சிகிச்சை பெற்றுவந்தான். தொடர்ந்து ஊசி ஏற்றப்பட்டு வந்தது.

திடீரென ஊசி ஏற்றிய கை நீல நிறமடைந்து விறைப்புக் காணத் தொடங்கியது; கையும் செயலிழந்தது. உடல் இயக்கம் இல்லாத நிலை மேலும் பரவாமல் தடுப்பதற்காக அறுவை சிகிச்சை மூலம் நேற்று சிறுவனின் கை துண்டிக்கப்பட்டது.

மூளைக் காய்ச்சலுக்காக யாழ். ஆஸ்பத்திரியில் ஒன்றரை மாதங்களாகச் சிகிச்சை பெற்று வந்த 4 மாதப் பெண் குழந்தை ஒன்றின் கையும் கடந்த 12 ஆம் திகதி மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்டது தெரிந்ததே. [உ-15]

## தீர்வுக்கான யோசனை; அரசு விரைவில் அறிவிக்கும்

### அமைச்சர் தொண்டா தகவல்

திருச்சி, ஏப். 22

இனப்பிரச்சினைக்கான தீர்வை இலங்கை அரசு இன்னும் ஒரிரு மாதங்களில் அறிவிக்கும்.

இது தொடர்பான சமரச யோசனைகள் இலங்கை அரசின் பரிசீலனையில் உள்ளன.

—இவ்வாறு அமைச்சர் தொண்டமான் திருச்சியில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம், தனது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி சமரச யோசனைகள் அடங்கிய திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்திருப்பதாகவும் —

இதுபோன்று ஏனைய 11 அமைப்புகளும் சமரச யோசனைகளைச் சமர்ப்பித்திருப்பதாகவும் திரு. தொண்டமான் கூறினார்.

விடுதலைப் புலிகள் மீது இந்தியா விதிக்க இருக்கும் தடை, இலங்கைக்கு ஊக்கம் தருவதாக அமையும் என்றும் —

அது இலங்கை - இந்திய உறவைப்பாதிக்காது என்றும் திரு. தொண்டமான் மேலும் கூறினார். [உ-எ]

## இன்று மாலை வருகிறார்கள் பௌத்த குருமார் தூதுக்குழுவினர்

யாழ்ப்பாணம், ஏப். 22

பௌத்த குருமார் தூதுக்குழு இன்று மாலையில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து விடும் என்று நம்பிக்கையோடு எதிர்பார்க்கப்படுகிறது.

வண. பலப்பிட்டிய சித்தார்த்த மகநாயக்க தேரர் தலைமையில் மொத்தம் பன்னிரண்டு குருமார் இத்தூதுக் குழுவில் அங்கம் வகிப்பார்கள் என அறியவருகிறது.

பௌத்த பிக்குகள் நல்லெண்ண தூதுக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் காலத்தில் அவர்களுக்கான பாதுகாப்பு விடுதலைப் புலிகளினால் வழங்கப்படும். அவர்கள் தங்குவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளுக்கும் பௌத்த நல்லெண்ணத் தூதுக்குழுவுக்கும் இடையில் மூன்று சுற்றுப்பேச்சு வார்த்தைகள் நடைபெறும். முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நாளை [வியாழக்கிழமை] முற்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ● 9 வள்ளங்கள் மூழ்கடிக்கப்பட்டன

## படையினரால் நடுக்கடலில் தள்ளப்பட்ட 22 மீனவர் மீட்பு!

### மேலும் ஒருவர் பலி; இன்னும் மூவரைக் காணவில்லை

வடமராட்சி, ஏப். 22

பருத்தித்துறைக் கடலில் கடற்படையினர் கடந்த திங்கட்கிழமை நடத்திய அட்டகாசத்தின்போது காணாமற்போன மீனவர்களில் மற்றும் ஒருவர் மரணமானார். மூன்று பேரை இன்னும் காணவில்லை. 22 பேர் கடலில் நீண்டதூரம் நீந்திக் கரை சேர்ந்தனர்

மீனவர்கள் தொழிலுக்கு எடுத்துச்சென்ற ஒன்பது வள்ளங்கள் கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டன. அவர்களின் பல்லாயிரம் ரூபா பெறுமதியான வலைகளையும் கடற்படையினர் கட[illegible] விட்டனர்.

ஒன்பது படகுகளிலும் பொருத்தப்பட்டிருந்த வெளி மோட்டார் இயந்திரங்களை கடற்படையினர் எடுத்துச் சென்றுவிட்டனர்.

இந்த வகையில் மீனவர்களுக்கு பதினைந்து லட்சம் ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்[illegible] இறது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கச்சதீவு விவகாரத்தில் ஜெயலலிதாவுக்கு தோல்வி!

லண்டன், ஏப். 22

கச்சதீவைத் திரும்பப் பெறுவதற்கு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன.

இந்தத் தோல்வியை அவரே நேற்று சட்டசபையில் ஒப்புக் கொண்டார்.

கச்சதீவைத் திரும்பப் பெறுமாறு மத்திய அரசைத் தாம் தொடர்ந்து வற்புறுத்தி வந்ததாகவும் —

ஆனால் சர்வதேச ஒப்பந்தங்களை எளிதில் முறித்துக் கொள்ள முடியாதென மத்திய அரசு கூறிவிட்டதாகவும் அவர் நேற்று சட்ட சபையில் தெரிவித்தார்.

இராமேஸ்வரம் மீனவரின் நலன் கருதியே தாம் இந்த முயற்சியில் ஈடுபட்டதாகவும் அவர் சொன்னார்.

எனினும் இராமேஸ்வரம் மீனவர்களுக்கு நன்மையளிக்கும் புதிய திட்டம் ஒன்றை தாம் தயாரித்திருப்பதாக அவர் அறிவித்தார்

இத்திட்டத்தின்படி மீனவக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் கடற்கரையோரமாக அரை ஏக்கர் நிலம் கொடுக்கப்படும். இதில் அவர்கள் இறால் பண்ணைகள் அமைக்க சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும். — என்றார் அவர், [உ-10]

## முச்சந்தி முரளி



அப்ப...... செல்விக்கு காவேரியும் போச்சுது........ கச்சதீவும் போச்சுது ........!

## காணாமற் போனவர்களை மீட்பதற்கு அனுமதி மறுப்பு!

வடமராட்சி, ஏப். 22

பருத்தித்துறைக் கடலில் கடற்படையினர் நடத்திய தாக்குதலினால் காணாமற் போனவர்களைத் தேடி மீட்பதற்கு படை அதிகாரிகள் திங்கட்கிழமை அனுமதி மறுத்து விட்டனர் என்று அறியவருகிறது.

திங்கள் மாலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் பருத்தித்துறைக்கு சென்றபோது, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும், காணாமற்போனவர்களின் உறவினர்களும் காணாமல் போனவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு உதவும்படி அதிகாரிகளிடம் கோரினார்கள்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் படை அதிகாரிகளுடன் தொலைத் தொடர்பு கருவி மூலம் தொடர்பு கொண்டுவிட்டு அனுமதி மறுக்கப்பட்டதாகத் தெரிவித்தனராம்.

அதன் பின்னர் கிராமிய

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் 2 பத்திரிகைகளை தண்டிக்க சட்டசபை முடிவு

சென்னை, ஏப். 22

தமிழக சட்டசபையின் சிறப்புரிமைகளை மீறிக் கட்டுரைகள் வெளியிட்டதற்காக முரசொலி மற்றும் மாலை முரசின் கோவைப் பதிப்பு ஆகியவற்றின் ஆசிரியர்களை சட்டசபைக்கு வரவழைத்து, கூண்டில் ஏற்றித் தண்டிப்பது என்று திங்கள் இடம்பெற்ற சட்டசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இது சம்பந்தமான தீர்மானத்தை சபை முதல்வர் அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் முன்மொழிந்தார்.

கோவை மாலை முரசு பத்திரிகை நடக்காத ஒன்றை நடந்ததாகப் பிரசுரித்ததற்காகவும்—

சபைக் குறிப்பேட்டில் இருந்து நீக்கப்பட்ட பகுதிகளை முரசொலி பிரசுரித்ததற்காகவும் இந்த நடவடிக்கைகளை எடுப்பது என்று சபை முடிவு செய்தது.

இரண்டு பத்திரிகைகளின் சட்டசபைச் செய்தியாளர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதியை பத்துத் தினங்களுக்கு ரத்துச் செய்வது என்றும் சபை தீர்மானித்தது.

[உ-எ]

# வருடாந்த மகோற்சவம்

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை காலை நடைபெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

மே மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். மகா சங்காபிசேகமும், பூங்காவனமும் மே 4 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

# ஜே.வி.பி. கொலைக் குழுவின் முக்கிய தலைவர் கைது!

கொழும்பு, ஏப். 22

ஜே.வி.பி. படுகொலைக் குழுவுக்கு முன்னர் தலைமை வகித்ததாகக் கூறப்படும் ரன் புத்தா என்ற பெயருடைய நபர் கரந்தெனியாவில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார் என்று அறிவிக்கப்படுகின்றது.

1988, 89 ஆம் ஆண்டுகளில் ஜே.வி.பி நடவடிக்கைகளின் போது இரு பொலிஸார் உட்பட 13 பேரைக் இந்த நபர் கொலை செய்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

தாம் புரிந்த குற்றச் செயல்கள் பற்றிய விபரங்களை இந்த நபர் பொலிஸாருக்கு அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார் என்றும்—

அவர் கொடுத்த தகவலைத் தொடர்ந்து, மறைத்து வைத்திருந்த ஆயுதங்களை பொலிஸார் மீட்டனர் என்றும் இலங்கை வானொலி அறிவித்தது.

நாடாளுமன்றக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த மாத்தறை மாவட்ட முன்னாள் எம்.பி கீர்த்தி அபேவிக்கிரமவின் வீட்டுக்குத் தீ வைத்தது, பெந்தோட்டை பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்தியது, வங்கிக் கொள்ளைகள் ஆகியன அந்த நபர் செய்த குற்றச் செயல்களில் அடங்குகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(உ-எ)

# அரசு மீதான குற்றச்சாட்டுகள்:

# நாடாளுமன்றில் விவாதம் நடத்தக் கோரிக்கை

கொழும்பு, ஏப். 22

அரசுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்பட வேண்டும்.

எதிர்கட்சிகளின் சார்பில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான ரிச்சேர்ட் பத்திரான நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் இவ்வாறு கோரியிருக்கிறார்.

★ பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொல அரசுக்கு எதிராகத் தெரிவித்த குற்றச்சாட்டுகள்.

★ 1989 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாகத் தெரிவித்து தேர்தல் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கை.

— ஆகிய இரு விடயங்கள் குறித்தே விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது.

[உ-10]

# பிரபாவை பாதுகாக்க இலங்கை முயல்கிறதாம்

## லோகசபையில் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஏப். 21

ராஜீவ் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இலங்கை அரசு பாதுகாக்க முயல்கிறது.

—இவ்வாறு இந்திய லோகசபையில் தமிழ் நாட்டைச் சேர்ந்த இந்திரா காங்கிரஸ் எம். பி திரு. தங்கபாலு குற்றஞ் சாட்டினார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது தடைவிதிப்பதை இந்திய அரசு இனியும் தாமதப்படுத்தக் கூடாது என்றும் அவர் கூறினார்.

"திரு. பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்கப் போவதில்லை என்று இலங்கை ஜனாதிபதி திரு. பிரேமதாஸா அறிவித்திருப்பதால், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் உடனடியாகத் தடை விதிக்க வேண்டும்.''—இவ்வாறு அ. தி. மு. க. உறுப்பினர் எம். ஆர். ஜனார்த்தனம் வலியுறுத்தினார்.

(உ-எ)

# இன்று

கோண்டாவிலில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியற் பிரிவின் யாழ் மாவட்ட செயலகத்தில் உள்ள மாவீரர் கலையரங்கில் மாதாந்த கலை நிகழ்ச்சி இன்று மாலை 7-30 மணிக்கு நடைபெறும். இந்நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவர். அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டு கழகத்தினரின் கலை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

[உ]

★ ★

யாழ்ப்பாணம், ஏப் 22

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த குருளைச் சாரணர்கள், சாரணர்கள், திரிசாரணர்கள் ஆகியோருக்கான பயிற்சிகள் இன்று முதல் வாரம் தோறும் புதன்கிழமைகளில் பிற்பகல் 4 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என யாழ். மாவட்ட சாரணர் கிளைச் சங்கம் அறிவித்துள்ளது.

(உ)

★ ★ ★

நவாலி, ஏப். 22

வலி. மேற்கு பிரிவுச் செயலகம் நடத்தும் புத்தாண்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சித்தன்கேணி கணேச வித்தியாசாலையில் நடைபெறும்.

வலி. மேற்கு பிரதேச செயலர் செல்வி ருபினி கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக யாழ் அரச அதிபர் திரு. க மாணிக்கவாசகர் கலந்து கொள்வார்.

[உ-100]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாணம் ஆங்கில மருந்து வர்த்தகர்கள் சங்கத்தின் மூன்றாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று மாலை 3 மணிக்கு யாழ். வர்த்தக சங்கப் பணிமனை மண்டபத்தில் நடைபெறும்.

[உ-15]


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L

பிரிவு — 4 DAY CLASSES [8-00 — 3-00]

பிரிவு — 3 EVENING CLASSES [3-00 — 6-00]

பிரிவு — 2 SAT., SUN CLASSES [8-00 — 3-00]

ஆரம்பம்: 23 - 04 - 1992

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு J R. குரு |
| கணிதம் | — | திரு. ஜெகன் |
| ஆங்கிலம் | — | திரு. விஸ்வநாதன் |
| தமிழ் | — | திரு. சிவா |
| சமூகக்கல்வி | — | திரு கோபி |
| வர்த்தகம் | — | திரு. கருணாகரன் கோபி |
| சமயம் | — | திரு. சங்கர் |

முக்கிய குறிப்பு:

★ கணித, விஞ்ஞான பாடங்கள் நாள் ஒன்றிற்கு 2 மணி நேரம் நடைபெறும்

★ 92 ஆம் ஆண்டு O/L 3 ஆம் பிரிவைத் தொடர்ந்து பிரிவு 4, 5 உடன் ஆரம்பிக்கப்படவுள்ளன. உங்கள் அனுமதிகளை 07-05-1992 இற்கு முன் பெற்றுக் கொள்ளலாம். அதன் பின் புதிய அனுமதிகள் வழங்கப்படமாட்டாது.

★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்

[வி-2212]


# 1991 ஆம் ஆண்டு நடைபெறாத ஆங்கில உதவி ஆசிரியர் பரீட்சை

அரச வர்த்தமானியில் வெளியிட்டபடி 24-07-91இல் நடைபெறவேண்டிய மேற்படி பரீட்சையை உடன் நடத்தக் கோருவது சம்பந்தமாக ஆலோசித்து தீர்மானம் எடுத்து, வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவியாக இப் பரீட்சைக்கு விண்ணப்பித்த யாவரும் 25-04-1992 சனி பிற்பகல் 2 00 மணிக்கு இல. 392, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நடைபெறும் கலந்துரையாடலில் தவறாது பங்கு பற்றும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

- க முருகேசர்.

392, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

[20666]

# ஒத்திவைக்கப்பட்டுள்ளது

பண்டத்தரிப்பு இந்து வாலிபர் சங்கத்தினரால் புத்தாண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட சைவ சமய பாடப் பரீட்சைக்கான சான்றிதழ் வழங்கல், மற்றும் அதிர்ஷ்ட லாபச்சீட்டு குலுக்கல் என்பன 15-05-92 வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்பதை வருத்தத்துடன் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செயலாளர்,
பண்டத்தரிப்புப் பிரதேச இந்து - வாலிபர் சங்கம்.
பண்டத்தரிப்பு.

[4687]

# அதிபர்கள், ஆசிரியர்களின் சுதந்திரத்தைப் பறிக்காதீர்!

## பணிப்பாளரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 22

''அதிபர்கள், ஆசிரியர்கள் தமது அனுமதியின்றி பத்திரிகைகளுக்கு அறிக்கைகளோ, பேட்டிகளோ, கட்டுரைகளோ வழங்கக் கூடாது என்று கல்விப் பணிப்பாளர் அறிவித்திருப்பதை அனுமதிக்க முடியாது.''

"இந்த அறிவிப்பு ஆசிரியர்களின் அடிப்படை உரிமைகளான பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், அரசியல் உரிமை ஆகியவற்றை அடக்கி, ஒடுக்கி நிர்வாகத்தினது ஊழல்களையும், அதிகாரிகளின் அட்டகாசங்களையும் சமூகத்திற்கு மறைக்க எடுக்கும் ஒரு நடவடிக்கையாகும். பணிப்பாளரின் இச்செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.''

— இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம், வடபிராந்திய கல்விப் பணிப்பாளருக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது :-

★ பணிப்பாளர் குறிப்பிட்டுள்ள ஸ்தாபனக் கோவைப் பிரிவு அதிபர்கள், ஆசிரியர்களில் 90 வீதத்தினரைக் கட்டுப்படுத்தாது.

★ விசேட பட்டதாரிகள் தவிர்ந்த ஏனைய தராதர முள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும் அரசியல் உரிமை, எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் ஆகியவை ஸ்தாபனக் கோவையின் அடிப்படையில் உண்டு.

— தொழிற்சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள் ஆகியோருக்கும் இவ்வுரிமைகளும் சுதந்திரமும் உண்டு.

★ ஸ்தாபனக் கோவையை சரியாகப் புரிந்து கொள்ளாது இம்மாவட்டத்திலுள்ள 500 அதிபர்களையும், 7 ஆயிரம் ஆசிரியர்களையும் தவறாக வழிநடத்தி, அவர்களின் அடிப்படை உரிமைகளிலும், பேச்சு மற்றும் எழுத்துச் சுதந்திரங்களிலும் கை வைக்க வேண்டாம்.

★ மேற்படி காரணங்களினால் இச் சுற்று நிருபத்தை உடனடியாக வாபஸ் பெறும்படி வற்புறுத்துகிறோம்.

-இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ]

# வங்கிப் பரீட்சை முடிவுகள்

கொழும்பு, ஏப். 22

இலங்கை வங்கியாளர் நிறுவனம் நடத்திய வங்கி முகாமைத்துவ டிப்ளோமா பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

[இ-எ]

# 18 மணி நேரமாக பணயம் வைக்கப்பட்ட சவூதி தூதர் தப்பினார்!

கெய்ரோ, ஏப். 22

யேமன் நாட்டில் உள்ள சவூதி அரேபிய தூதரகத்தில் 18 மணித்தியாலங்களாக துப்பாக்கி மனிதன் ஒருவனால் பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்த சவூதி அரேபியத் தூதரை யேமனின் பாதுகாப்புப் படையினர் மின்னல் வேக இராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம் மீட்டனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

ஒரு லட்சம் டொலர் பணம் தரப்படும் பட்சத்திலேயே சவூதி தூதர் விடுவிக்கப்படுவார் என்று யேமன் பிரசையான அந்தத் துப்பாக்கி மனிதன் கோரியதாகவும்—

இல்லாவிடின் தூதரகக் கட்டடத்தை குண்டு வைத்துத் தகர்க்கப்போவதாக அவன் எச்சரிக்கை செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சவூதி தூதர் காயங்கள் ஏதுமின்றி மீட்கப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் மீதான தாக்குதல் குறித்து
# செஞ்சிலுவை சங்கத்திடம் முறையீடு

யாழ்ப்பாணம் ஏப். 22
பருத்தித்துறையில் மீனவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இது விடயமாக கடற்படை அதிகாரிகளுக்கும், கொழும்பில் உள்ள தனது தலைமையகத்துக்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகம் தகவல்களை அனுப்பி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மீனவர்கள் மீதான தாக்குதல் தொடர்பாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு கடற்படையினருடன் தொடர்பு கொண்டபோது, கடலில் இரண்டு மைல்களுக்கு அப்பால் மீனவர்கள் நடமாடக்கூடாது எனத் தெரிவிக்கப்பட்டதாம்.

(இ-3-165)

## பௌத்த மதகுருமார் குழு
# பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடனேயே வருகிறது

கொழும்பு, ஏப். 22
பௌத்த மத குருமார் தூதுக்குழுவின் யாழ்ப்பாண விஜயத்துக்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சு வழங்கி உள்ளது.

குழுவின் பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று கூட்டுப்படைகள் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் இருந்து விமான மூலம் பௌத்த தூதுக் குழுவினர் பலாலிக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

[இ-எ]

# ஆசிரியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஏப். 22
பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கான ஏப்ரல் மாதச் சம்பளங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

பலாலி ஆசிரியர் கலாசாலையைச் சேர்ந்தவர்களுக்கு இன்றும்—

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 24 ஆம் திகதியும் சம்பளம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

(உ-3)

# தொண்டாவின் யோசனை பிரேமாவினுடையதே

## லலித் அத்துலத்முதலி கூறுகிறார்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக தொண்டமான் சமர்ப்பித்த யோசனைகள் குறித்து ஜனாதிபதி பிரேமதாஸா இன்னும் மௌனத்தையே கடைப்பிடித்து வருகின்றார். அந்த யோசனைகளை தொண்டமான் — பிரேமதாஸா யோசனைகள் என்றே வர்ணிக்கலாம்.

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஹொரகணையில் நடந்த ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கருத்தரங்கில் பேசுகையில் முன்கண்டவாறு கூறினார்.

தொண்டமான் - பிரேமதாஸ யோசனைகள் குறித்து தன்னிச்சையாக எவரும் தீர்மானம் எடுக்க முடியாது. சர்வசன வாக்கெடுப்பு ஒன்று மூலமே அதுபற்றி முடிவு காணப்பட வேண்டும் என்றும் திரு. அத்துலத்முதலி கூறினார்.

[இ-எ]

# ந. ச. ச. கட்சி தனித்து மே தினம்

மேதினக் கூட்டத்தை தனித்து நடத்தப் போவதாக நவ சமசமாஜ கட்சி அறிவித்துள்ளது.

தமது கட்சி தனித்தே மேதின ஊர்வலத்தையும் நடத்தும் என்றும் திரு. வாசுதேவ நாணயக்காரா அறிவித்தார்.

"பாதயாத்திரையில் நாம் கலந்து கொண்டதால் சுதந்திரக்கட்சியுடன் நமக்கு உள்ள அரசியல் வேறுபாடுகள் தீர்ந்து விட்டன என்று எவரும் நம்பிவிடக்கூடாது. அதனால் தான் நாம் தனித்து மேதினக் கூட்டத்தை நடத்த முடிவு செய்துள்ளோம்" — இப்படி திரு. வாசுதேவ நாணயக்காரா சொன்னார்.

[இ-எ]

# வாழைச்சேனைப் பகுதியில் வெளியார் குடியேற்றம்

## தமிழர்கள் வெளியேற்றம்

வாழைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வீடுகளில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் குடியேற்றப்படுகின்றனர். இதனால் அங்கு வாழ்ந்த தமிழர் பலர் வீடு வாசல்களை இழந்து அகதி முகாம்களில் வாழ்கின்றனர்.

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு செயலகத்தில் நடைபெற்ற புனர்வாழ்வு, புனரமைப்பு தொடர்பான உயர்மட்ட மாநாட்டில் இது குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

[இ-5]

## களனி டயர் கூட்டுத்தாபனம் அருகே
# கைவிடப்பட்டிருந்த காரில் வெடிமருந்துப் பொருள்கள்

கொழும்பு, ஏப். 22
களனி டயர் கூட்டுத்தாபன வளவு அருகில் கைவிடப்பட்டிருந்த பழைய கார் ஒன்றில் இருந்து ஆறு ஜெலிக்னைற் வெடி மருந்துக் குச்சிகள் மூன்று வெடிக்க வைக்கும் கருவிகள், வயர்கள் மற்றும் சிறு தொகை வெடிப்பொருள்களை பொலீஸார் கண்டு பிடித்தனர்.

இது தொடர்பாக பலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர் என்றும் ஆனால் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

[இ-எ]

# 291 தொண்டர் ஆசிரியருக்கே கல்முனையில் நிரந்தர நியமனம்

கொழும்பு, ஏப். 22
கல்முனை மாவட்டத்தில் பணிபுரிந்து வந்த ஆயிரத்து 200 தொண்டர் ஆசிரியர்களில் 291 பேருக்கே நிரந்தர நியமனம் வழங்குமாறு கல்விச் சேவைகள் ஆணைக்குழு பணிப்புரை வழங்கியுள்ளது.

நியமனம் கிடைக்காத ஆசிரியர்கள் தமது ஆட்சேபத்தை வலியுறுத்தி போராட்டத்துக்கு முஸ்தீபு செய்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. [இ-3]

# ஈழத் தமிழரைக் கொன்ற சுவிஸ் குத்துச்சண்டை வீரர்

## 18 மாத ஒத்திவைப்புச் சிறை

சுவிஸில் இலங்கைத் தமிழ் வாலிபர் ஒருவரை படுகொலை செய்த குற்றத்தை ஒப்புக்கொண்ட முன்னாள் சுவிஸ் குத்துச் சண்டை வீரர் ஒருவருக்கு சுவிஸ் நீதிமன்றம் 18 மாத கால ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதித்தது.

வழக்கு மற்றும் செலவுகளுக்காக 4,500 சுவிஸ் பிராங்குகள் (இலங்கைப் பணத்தில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா) வழங்கும்படி நீதிமன்றம் எதிரிக்கு உத்தரவிட்டது.

[இ-எ]

## தமிழக சட்டசபை பிறப்பித்த
# பிடிவிறாந்தை ரத்துச் செய்யுமாறு பத்திரிகையாளர்கள் கோரிக்கை

சென்னை, ஏப். 22
'இல்லஸ்டிரேட்டட் வீக்லி' வார இதழில் முன்னர் கட்டுரையாளராகப் பணியாற்றிய திரு. கே. பி சுனிலை கைது செய்ய விடுக்கப்பட்ட பிடிவிறாந்து உத்தரவை ரத்துச் செய்யும்படி தமிழக சட்டசபையையும் அதன் சபாநாயகரையும், 15 பத்திரிகை ஆசிரியர்களும், மூத்த பத்திரிகையாளர்களும் கோரியுள்ளனர்.

சட்டசபையின் தீர்ப்பு இந்தியாவில் பத்திரிகை சுதந்திரத்துக்கும் எண்ணங்களை வெளியிடும் சுதந்திரத்துக்கும் ஓர் அடியாகும் என்றும் இவர்கள் கடந்த திங்கள் புதுடில்லியில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியுள்ளனர்.

இந்த அறிக்கையில் 'புரொண்ட்லைன்' ஆசிரியர் என். ராம், 'இக்கொனொமிக் டைம்ஸ்' ஆசிரியர் அஜித் குமார், 'டைம்ஸ் ஒப் இந்தியா' ஆசிரியர் திலிப், 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஆசிரியர் எச். கே துவா ஆகியோர் உட்பட பலர் கையெழுத்திட்டுள்ளனர்.

கடந்த செப்டம்பரில் வெளியான 'இல்லஸ்டிரேட்டட் வீக்லி' இதழ் ஒன்றில், சட்டமன்றம் பற்றி எழுதப்பட்டிருந்த கட்டுரை ஒன்று தொடர்பாக சபையில் தெரிவிக்கப்பட வேண்டும் என்று திரு. சுனிலுக்கு சட்டசபை ஆணை பிறப்பித்திருந்ததும் —

அதனை ஏற்று திரு. சுனில் சட்ட சபையில் ஆஜராகத் தவறியதும் தெரிந்தவையே.

[இ-எ]

## யாழ்ப்பாணத்தில் நாளை
# முதலாவது விஞ்ஞான மாநாடு

யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக மூன்று நாள் விஞ்ஞான மாநாடு ஒன்று நடைபெற உள்ளது.

யாழ். பல்கலைக்கழக பௌதிக மண்டபத்தில் நாளை 23 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை இம் மாநாடு நடைபெறும்.

பேராசிரியர் அ. துரைராசா மாநாட்டுக்குத் தலைமை வகிப்பார்.

பொதுத் தலைவர், பிரிவுத் தலைவர்களின் உரைகள், ஆராய்ச்சிக் கட்டுரை வாசித்தல் ஆகியன இம் மூன்று நாட்களிலும் நடைபெறும்.

இறால் வளர்ப்பு, பூச்சிக் கட்டுப்பாடு, நன்னீர் நிலைகள் கட்டடப்பிரச்சினைகள், துவிச்சக்கர வண்டியில் போகும் போது நுரையீரலின் செயற்பாடு, யாழ்ப்பாணத்தில் வருவாய் தரும் பயிர்களின் செயற்பாடு ஆகியவை தொடர்பாக கருத்தரங்குகள் நடைபெறும்.

இம் மாநாட்டில் சகலரும் பங்குபற்றலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)


THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

O/L 92
துரித மீட்டல் வகுப்பு

★ பகல் முழு நேரம்
★ மாலை நேரம்

ஏப்ரல் 25 (சனிக்கிழமை)
(காலை 9-00 மணிக்கு)
ஆரம்பமாகிறது

[இ-1883]



புதிய உயர் கல்லூரி
(New College of High Studies)
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

A/L 92

Paper Classes
ஆரம்பம்
28-04-1992
[செவ் —வியா.]

பொருளியல் — லோகசிங்கம் 11 மணி
இ. நாகரிகம் — அருள்நங்கை 10 மணி
வர்த்தகம் — பசில் 9 மணி
தமிழ் — ரவி 8 மணி
அளவையியல் — மகேந்திரன் 12 மணி
கணக்கியல் — ராஜன் 1 மணி
அரசியல் — கியூபேட் 2 மணி

[இ-1883]



துரித மீட்டல் வகுப்பு O/L
கலை, வர்த்தக கல்லூரி
C.C.A
வெலிங்டன் சந்திக்கு அருகாமை
யாழ்ப்பாணம்.

DAY CLASS O/L - 1992

விஞ்ஞானம் — திரு. இரா. செல்வவடிவேல்
கணிதம் — திரு இரா அருள்செல்வம்
சமூககல்வி — திரு. கணேஸ்
தமிழ் — பண்டிதர்
சமயம் — திருமதி குமரன்
ஆங்கிலம் — திரு. T. லிங்கம்
வர்த்தகம் — திரு. விக்கி

ஆரம்பம்: 23 - 04 - 1992
காலை 8-00 மணி

குறிப்பு: மாணவர்கள் விருப்பத்துக்கு ஏற்ப பாடங்களை தெரிவு செய்யலாம். வினா - விடை வகுப்புகளும் நடைபெறும்.

[சி-2206]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு 30 அங்குல உயரமுடைய அர்க்கேரியா (Arucaria Christmas Tree) கன்றுகள் உடன் விற்பனைக்குண்டு. கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம். [20653]

### விற்பனையாகின்றன

கடந்த கால O/L, A/L வினா - விடைகள் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு, அப்பியாசக் கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. அறிவகம், 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [சி/2203]

### தேவை

தேநீர்சாலையில் உணவு பரிமாறும் வேலைக்கு ஆண்கள் உடன் தேவை. அனுபவம் உடையவர்கள் நேரில் சமுகம் தரவும். பம்பாய் உணவு இன்சுவையகம், 226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [4675]

சகல வித உடைகளும் வெட்டித் தைக்கக் கூடிய ஆண் ரெயிலர் தேவை. நேரில் வரவும். கிறீன் சியஸ் ரெயிலறிங், மத்திய பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [20662]

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம். விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக்கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி/1888]

ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை எதிர்வரும் வியாழன் 23-4-92 காலை 10-00 மணியளவில் நடைபெறும். வெளி மாணவரும் தோற்றலாம். விவரங்களுக்கு 99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (வண்ணை தபாலகம் முன்பாக). [20663]

### இலவச திருமண சேவை

32 வயது, அத்தம் 1, செவ்வாய் 7, சுவிஸில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்யலாம். சந்திப்பு ஞாயிறு காலையில். து. விமலா, யா/ நாச்சிமார் கோவிலடி. [4682]

29 வயது, திருவாதிரை 3, செவ்வாய் 7, சுவிஸ் மணமகனுக்கு மணப்பெண் தேவை. வெளியூர், உள்ளூர் விண்ணப்பங்கள் ஏற்கப்படும். சந்திப்பு ஞாயிறு காலையில். து. விமலா, யா/ நாச்சிமார் கோவிலடி. [4678]

### மருந்துப் பொருள்கள் அன்பளிப்பு

தாளையடி, ஏப். 22 வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணி அரசினர் வைத்தியசாலைக்கு விஜயம் செய்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஒரு தொகுதி மருந்துப் பொருள்களை வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்தது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மருத்துவப் பிரிவைச் சேர்ந்த செல்வி ஹாய்ஸ்சியா கடந்த புதன்கிழமை மருதங்கேணி வைத்தியசாலைக்கு நேரில் விஜயம் செய்து குறைபாடுகளைக் கேட்டறிந்தார். [த-144]

---

# BITSMANS

கல்வி நிறுவனம், மானிப்பாய்.

## 92 O/L
## DAY CLASS

ஆரம்பம்: 23-04-1992

வியாழன் 8-00 a. m.

எமது வழமையான "SUPER GRADE" ஆசிரிய குழுவில்

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | J. R. ஜூரி |
| கணிதம் | — | இரா. அருட்செல்வம் |
| தமிழ் | — | பாலா |
| ஆங்கிலம் | — | M. A. ஹரி |
| வர்த்தகம் / சமூகக்கல்வி | — | ராஜன் |
| இந்துசமயம் | — | தர்மா |

A/L 94 கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகள் 18-04-92 ஆரம்பமாகிவிட்டன. [சி/1924]

---

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 22 — 08 — 1934

மறைவு: 22 — 04 — 1991

## அமரர் சின்னப்பு பர்ணாந்து

ஆண்டொன்று அகன்றுவிட்ட போதிலும், உங்கள் அன்பு நினைவுகள் என்றென்றும் அகலாது நிலைத்திருக்கும்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

32/11, 2 ஆம் குறுக்குத் தெரு, பாஷையூர். [20655]

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## இளையதம்பி திருநீலகண்டர்

[ஓய்வுபெற்ற கணக்காளர், மீன்பிடி அமைச்சு, கொழும்பு]

தோற்றம்: 18—04—1932

மறைவு: 04—05—1991

எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனை என்றும் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

" நினோராஜ் பவன் ", அரணவாய் தெற்கு, கரவெட்டி. [20658]

---

# ஹோமியோபதி சிகிச்சை

பக்க விளைவுகள் இன்றி சத்திர சிகிச்சையை தவிர்த்து தங்கள் வியாதிகளை சொஸ்தம் செய்ய சந்தியுங்கள்

ஹோமியோபதி டாக்டர் எம். வேலுப்பிள்ளை, ஹோமியோ கிளினிக் அன்ட் பார்மஸி, பண்டத்தரிப்பு.

(சித்தன்கேணி றோட்டில் - பண்டத்தரிப்பு சந்திக்கு அருகாமையில்) [20652]

---

# தாதிப் பயிற்சி நெறி
## Training For Nurses

1. தாதியர்களுக்குரிய சகல பாடத்திட்டங்களும் உள்ளடக்கப்பட்டது.
2. உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு உரியது.
3. மாவீரர், போராளிகள் குடும்பத்தவர்களுக்கு இலவசக்கல்வி, இலவச தங்குமிடவசதி.

19—04—1992 இல் ஆரம்பமாகியுள்ளது.

அதிபர்,

## சாயி மெடிக்கல் அக்கடமி,

இல. 6, பருத்தித்துறை வீதி, 1 ஆம் ஒழுங்கை (மக்ரவல்ஸ் அருகில்), யாழ். நகர். (சி/2299)

---

# ஓராண்டு நினைவஞ்சலி

செல்வன்

## நாகலிங்கம் சிவநேசன் (குமார்)

[ஆசிரியர்]

மறைவு: 22 — 04 — 1991

எங்கள் அன்புச் செல்வமே! எங்களை விட்டு நீ மறைந்து ஆண்டு ஒன்றாகி விட்டது. உன் அன்பு முகம் என்றும் எம் உள்ளத்தை விட்டு அகலாது. எங்கு சென்றாய் என அறியாது அல்லல் உறுகின்றோம்.

சிறியதாய்மார், சிறியதந்தைமார், மாமி, மைத்துனர்மார், மச்சாள்மார், சகோதரிகள்.

டச் வீதி, சாவகச்சேரி. [4685]

---

# 16 ஆம் நாள் நினைவஞ்சலி



## சண்முகம்பிள்ளை சபாரெத்தினம்

மலர்வு: 19—03—1925

உதிர்வு: 06—04—1992

என்றும் எம் நெஞ்சை விட்டகலா எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று [22-4-92] எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கு. [20661]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பயணம் பயனுள்ளதாக...

பௌத்த குருமார்கள் இங்கு வந்து சேர்ந்த பின் நாலை காலையில் விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடாகி உள்ளது

வடக்கு - கிழக்கில் யுத்தம் மூண்ட பின்னர், தமிழ் மக்கள் சீவ மரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் சூழலை, வடக்கே பல நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் வந்து சென்றுள்ளன.

யாழ்ப்பாணத்துக்கு நல்லெண்ண விஜயம் செய்தவர்கள் எல்லோரும் இங்குள்ள மக்களின் கஷ்டங்களை, இன்னல்களின் மத்தியிலும் அவர்களுக்கு உள்ள மன உறுதியை, விடுதலை உணர்வை, தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக உள்ள விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை கொழும்பு சென்று ஓரளவிலேனும் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனால் அரசாங்கத் தரப்பிலோ அல்லது அங்குள்ள செல்வாக்குள்ள தரப்பினர்கள் மத்தியிலோ தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற உளமார்ந்த விருப்பம் ஏற்படவில்லை.

தலைவர் பிரபாகரன் கூறியது போன்று —

தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு சிங்களப் பேரினவாதிகள் தயாராக இல்லை —

மனித தர்மத்தின் அடிப்படையில் தமிழருக்கு நீதியும் நியாயமும் வழங்க சிங்கள தேசம் தயாராக இல்லை, பழைய அடக்குமுறைப் பாலதயை சிங்கள ஆளும் வர்க்கம் கைவிட்டதாகத் தெரியவில்லை —

இரத்தமும் கண்ணீரும் தோய்ந்த ஒரு நீண்ட முடிவில்லாத சோக வரலாற்றைத் தழுவி நிற்கும் எமது மக்களின் துயர நிலை பற்றி சிங்கள இனவாதிகள் கவலை கொண்டதாகத் தெரியவில்லை — என்பதே உண்மை.

தமிழ் மக்கள் வேறு, விடுதலைப்புலிகள் வேறு என்ற யதார்த்தத்திற்குப் புறம்பான நிலையை மனதிற் கொண்டு, தப்புக்கணக்குப் போட்டுக் கொண்டு—

ஒருபுறம் யுத்தத்தைத் தீவிரப்படுத்திக் கொண்டு மறுபுறம் சமாதானப் பேச்சுக்களை நடத்தி புலிகள் மீது நெருக்குதல் போட்டு ஒரு தீர்வைத் திணித்துவிடலாம் எனச் சிங்கள அரசு எண்ணுகிறது.

ஆனால் முந்திய தமிழ்த் தலைவர்களை ஏமாற்றியது போல தலைவர் பிரபாகரனை எவரும் இலகுவில் ஏமாற்றிவிட முடியாது

எதிரி எம்மீது படை கொண்டு தாக்கலாம்; புதிய ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தொடரலாம்; எது நிகழ்ந்தாலும் எதற்கும் அஞ்சாத துணிவும் உறுதியும் எம்மிடம் உள்ளவரை எம்மை வென்றுவிட முடியாது என்று அவர் கூறுவது எந்தத் தந்திரமான பொறிக்குள்ளும் தமிழர்களை வீழ்த்திவிட முடியாது என்பதையே எடுத்துக் காட்டுகிறது. தமிழ் மக்கள் சார்பில் அவரது மனோவலிமையை எடுத்தியம்புகிறது.

எனவே, சமாதான முயற்சியை மேற்கொண்டுவரும் பௌத்த குருமார் தூதுக்குழுவினர் அதற்கான நேர்மையான அணுகு முறையைக் கடைப்பிடிக்க மனம் கொள்ள வேண்டும் தலைவர் பிரபாகரனின் செய்தியை தமிழர்களின் கருத்தாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

அப்போது தான் அவர்களால் எதனையும் ஆக்கபூர்வமாகச் செய்ய முடியும். யாழ்ப்பாணப் பயணத்தைப் பயனுள்ளதாக்கிக் கொள்ளலாம்.

# தனி ஆசிரியர் பாடசாலைகளுக்கு மேலதிக ஆசிரியர் நியமனமாவார்

### சிறிய பாடசாலைகள் கருத்தரங்கில் முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாண மாவட்டத்தில் தனி ஆசிரியர் கற்பிக்கும் 38 பாடசாலைகளுக்கு மேலதிக ஆசிரியர்களை நியமிக்க முடிவாகி உள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள 88 சிறிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வது சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் இந்துக்கல் லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

கருத்தரங்கின் முடிவிலேயே தனி ஆசிரியர் கல்லூரிகளுக்கு ஆசிரியர்களை நியமிக்க முடிவாகியது.

இக் கருத்தரங்கில் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்விமான்கள், கல்விப்பகுதி அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதல் நாள் நிகழ்ச்சிகளின் போது வண. ஆ. சின்னராய அடிகளார், பேராசிரியர் கா. சிவத்தம்பி, கல்விப்பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம், பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. என் சண்முகலிங்கன், உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு நா. தணிகாசலம்பிள்ளை ஆகியோர் உரையாற்றினர்.

அதனைத் தொடர்ந்து ஒரு வார காலமாகச் செயலமர்வுகள் நடைபெற்றன.

இறுதி நாள் நிகழ்ச்சிகளுக்குப் பேராசிரியர் வ. ஆறுமுகம் தலைமை வகித்தார்.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் பயிற்சியின் அவசியம், பாடசாலை உபகரணங்களை வழங்குதல், மாணவர், ஆசிரியர் வரவை அபிவிருத்தி செய்ய வழிகாணல், சூழலுக்குரிய வளங்களை அபிவிருத்தி செய்தல், அவற்றை உச்ச அளவுக்குப் பயன்படுத்தல், அடிப்படைச் சுகாதார வசதிகளை ஏற்படுத்தல், சுகாதாரக் கல்வியை மேம்படுத்தல், பாடசாலையையும், சமூகத்தையும் இணைத்தல், பாடசாலை இணைப்பாடவிதானம், பலதரக் கற்பித்தல் ஆகியன பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

சிறிய பாடசாலைகளை இணைப்பதோ, மூடுவதோ அல்லது அபிவிருத்தி செய்வதோ பெற்றோரின் அபிப்பிராயப்படி தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற முடிவுக்கு வரப்பட்டது.

இக் கருத்தரங்கில் உரையாற்றிய யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தமது உரையில் பின்வருமாறு கூறினார்:

தற்சமயம் கல்விப் பகுதியில் வளங்கள் இல்லை. எனவே அவ்வப் பகுதி நலன் விரும்பிகள், பொது நல அமைப்புகள், பழைய மாணவர், பெற்றோர் ஆகியோரின் உதவி, ஒத்துழைப்போடு பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய வேண்டும். கூடிய விரைவில் சிறிய பாடசாலைகள் என்ற பெயர் உங்களின் கருத்துப் பெறப்பட்டு மாற்றப்படும் பெயர் மாற்றத்தோடு மனமாற்றம் பெற்று பாடசாலைகளை கிடைக்கும் வளங்களோடு அபிவிருத்தி செய்ய வேண்டும். பிள்ளைகளின் சுகாதாரம், சுகாதாரக்கல்வி அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்றார்.

சிறிய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோரைக் கொண்ட வளர்முகப் பாடசாலைகளின் ஒன்றியம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற ஆலோசனை அங்கீகரிக்கப்பட்டது [அ-18-ரி]

## இந்து மதக் குருமார்கள் ஒன்றியம் நிறுவ ஏற்பாடு

உடுவில், ஏப் 22

தமிழினத்தின் விடுதலைக்காகவும், மண் மீட்புக்காகவும் போராடும் போராளிகளுக்கு சமூகத்துடன் நெருங்கிய தொடர்புகளை கொண்டுள்ள மதகுருக்கள், ஆசிரியர்கள், கிராம சேவையாளர்கள் மற்றும் பொது ஸ்தாபனங்களின் ஆலோசனைகள் அவசியம் நாம் எவருக்காக போராடுகிறோமோ அவர்களின் அன்பும் ஆதரவும் எமக்கு வேண்டும்.

கோண்டாவிலில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் நிர்வாக செயலகத்தில் நடைபெற்ற தமிழீழ இந்து மதகுருமார் ஒன்றிய அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகளின் தமிழீழ அரசியல் பொறுப்பாளர் திரு. தமிழ்மாறன் இவ்வாறு கூறினார்.

அரசியலும் மதமும் மக்களுடன் ஒன்றிணைந்தவை தமிழீழ விடுதலைப் புலிகள் மதத்துக்கு எதிரானவர்களல்லர். ஆனால் ஒரு மதத்தை மட்டும் சார்ந்தவர்களுமல்லர். மத சுதந்திரம் சகலருக்கும் உண்டு என்பதே எமது கொள்கை —

ஏனைய மதத் தலைவர்கள் ஆலோசனை வழங்குவது போல இந்து மத குருமார்களின வழிகாட்டலும் ஆலோசனைகளும் எமக்குத் தேவை— என்றும் அவர் கூறினார்.

நூற்றுக்கணக்கான இந்து குருமார் சமுகமளித்த இக் கூட்டத்தில் இந்து மத குரு ஒன்றியம் ஒன்றை அமைப்பதற்கான குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. [அ 90]

பேருவளைக் கூட்டத்தில் பிரேமதாச:

# தம்பி குழப்பம் செய்தால் அண்ணன் திருத்த முயல்வான்

### அயலவனிடம் ஒப்படைக்கமாட்டான்

கொழும்பு, ஏப் 22

'இந்நாட்டில் பெரும்பான்மை சிங்களவரே மூத்த சகோதரர் சிறுபான்மையினர் தம்பிமார். ஒரு தம்பி குழப்பம் விளைவித்தால் அண்ணன் அவனை அயல் வீட்டாரிடம் ஒப்படைக்கமாட்டான். தானே திருத்த முயல்வான். இந்த ரீதியிலேயே நாமும் செயற்படுகிறோம்''

பேருவளையில் தொழில் நுட்பக் கல்லூரியை திறந்து வைத்து உரையாற்றுகையில் ஜனாதிபதி பிரேமதாசா மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையில் வாழும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் அனைவரையும் ஒரே குடும்ப சகோதரர்கள் என்றே நாம் கருதுகிறோம்.

எங்கள் நாட்டில் பெரும்பான்மைச் சிங்களவர்கள் பெரிய சகோதரர். சிறுபான்மை இனத்தவர்கள் சிறிய சகோதரர்கள்.

அண்ணன்மார், தம்பிமாரை நன்கு கவனிக்கும் சுபாவமுடையவர்கள். எமது குடும்ப அருங்குணம் இது. சிறிய சகோதரர்களுக்கு அநீதி ஏற்பட பெரிய சகோதரர்கள் இடமளிக்கமாட்டார்கள்.

தம்பி ஒருவன் குழப்பம் பண்ணினால் அவனை அண்ணன் அடுத்த வீட்டாரிடம் ஒப்படைக்கமாட்டான். அண்ணனே விவகாரத்தை கவனிப்பான்.

''இது போலவே நாம் இலங்கையில் அனைத்து மக்களினதும் நலன்களை கவனிப்பதில் ஈடுபாடு காட்டுகிறோம்''.

இப்படி ஜனாதிபதி கூறினார். [இ-3]

## கண் சிகிச்சை முகாம்

சங்கத்தானை, ஏப். 22

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் அடுத்த மாத முற்பகுதியில் கண் சிகிச்சை முகாம் ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர். [இ-ரி]

## புனரமைப்பு

தென்மராட்சி, ஏப். 22

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றை புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

[இ-117]

## மயான அபிவிருத்தி வேலைகள்

வேம்பிராய் மயான அபிவிருத்தி வேலைகள் சாவகச்சேரி பிரதேச சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

[இ-ரி]

## யாருடையவை?

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாண நகரில் தாம் கண்டெடுத்த பெண்கள் கடிகாரம் ஒன்றை வை. மாணிக்கம் என்ற அன்டர் உதயன் பணிமனையில் ஒப்படைத்துள்ளார்.

உரியவர்கள் தகுந்த அத்தாட்சிகளைத் தெரிவித்து அலுவலக நேரத்தில் அதனைப் பெற்றுக்கொள்ளலாம்.

★ ★ ★

சுன்னாகத்தில் கண்டெடுக்கப்பட்ட சிறு தொகைப் பணமும், ஆஸ்பத்திரி சிகிச்சை ஆவணங்களும் உதயன் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் நேரில் வந்து தகுந்த அடையாளம் காண்பித்துப் பெற்றுக் கொள்ளலாம் [அ]

## மாதாந்த உதவிப் பணம்

யாழ்ப்பாணம் ஏப். 22

வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குரிய மாதாந்த உதவிப் பணம் தற்போது வழங்கப்படுகிறது.

காங்கேசன்துறை ஊறணிக்கரை, பலாலி, மயிலிட்டி, வயாவிளான் தபாலகங்கள் மூலம் வழங்கப்படும் கொடுப்பனவுகள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுகிறது ஏனைய தபாலகங்களுக்கான கொடுப்பனவுகள், சம்பந்தப்பட்ட கிராமசேவை அலுவலர்களினால் வழங்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. [இ]

## செஞ்சிலுவை சங்கத்துக்கு அமெரிக்கா உதவி

கொழும்பு, ஏப். 22

தெற்காசிய நாடுகளில் நிவாரண வேலைகளைச் செய்வதற்காக அமெரிக்க அரசாங்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு 12 கோடி 60 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது

இந்த நிதி இலங்கை ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிதியின் ஒரு பகுதி புதுடில்லியில் உள்ள பிராந்திய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு வழங்கப்படும்.

தடுப்புக் காவலில் இருப்போருக்கு உதவவும், காணாமற் போனோரைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கும், வைத்திய சேவைகளுக்கும், சர்வதேச சட்டம் பற்றிய தகவல்களைப் பரப்புவதற்கும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கோட்பாடுகளைப் பரப்பவும் இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது [இ-எ]

### சீனாவில்

## கட்டாய இரத்ததானம்

பீகிங், ஏப். 22

சீனாவின் தலைநகர் பீகிங்கில் உள்ள ஆரோக்கியமான வயது வந்தவர்கள் எல்லோரும் ஒழுங்கு அடிப்படை ஒன்றின்படி இரத்ததானம் செய்ய வேண்டும்.

இப்படி சீன கம்யூனிஸ்ட் அரசாங்கத்தினால் பணிக்கப்பட்டுள்ளனர்.

தரமான இரத்தத்தை சேகரித்து வைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டுள்ள புதிய சட்டவிதிகளின் கீழ் இரத்தம் சேகரிக்கப்பட உள்ளது

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் இத்திட்டத்தின் கீழ்—

18 – 55 வயதுக்கு உட்பட்ட ஆண்களும் —

18 – 50 வயதுக்கு உட்பட்ட பெண்களும் இரத்தம் வழங்க வேண்டும்.

முதலில் இவர்களின் உடல்நிலை மற்றும் இரத்தம் பரிசோதனை செய்யப்படும். பரிசோதனையின் போது இவர்கள் ஆரோக்கியமானவர்களாகக் காணப்பட்டால், இவர்கள் ஒழுங்காக இரத்தம் தானம் செய்தே ஆக வேண்டும்

இரத்ததானம் செய்பவர்களுக்குச் சன்மானம் வழங்கப்படும், வைத்திய சிகிச்சை பெறுவதில் அவர்களுக்கு முன்னுரிமையும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ ஆப்கானிஸ்தானில்
# கெரில்லாக்களிடம் ஆட்சியை கையளிக்க ஜனாதிபதி தயார்!

காபூலைச் சுற்றிவளைத்துள்ள முஜாஹுதீன் கெரில்லா அமைப்புகளிடம் ஆட்சியை ஒப்படைக்கத் தயாராகவிருப்பதாக ஆப்கன் பதில் ஜனாதிபதி அப்துல் ரஹீம் ஹக்கீம் நேற்று அறிவித்தார்.

ஆட்சி அதிகார மாற்றம் அமைதியாக இடம்பெற வேண்டும் என்றும் அவர் கூறினார்.

எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமைக்கு முன்பதாக ஆட்சியை தம்மிடம் ஒப்படைக்கத் தவறும் பட்சத்தில் காபூலைத் தமது படைகள் தாக்கும் என்று முஜாஹுதின் கெரில்லா அமைப்பு ஒன்றின் தலைவரான ஹெக்மித்தியார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிடுகையில் —

முஜாஹுதீன் கெரில்லா அமைப்புகளில் ஒன்றிடம் மட்டும் ஆட்சியை ஒப்படைக்கும் எண்ணம் தமக்கு இல்லை என்றும் பதில் ஜனாதிபதி கூறினார். [உ-எ]

# அன்னை பூபதி நினைவாக மட்டக்களப்பில் நிகழ்வுகள்

மட்டக்களப்பு, ஏப். 22 அன்னை பூபதியின் நான்காவது ஆண்டு நினைவு தினம் மட்டக்களப்பிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

அன்னையின் நினைவாக கவிதை, கட்டுரை பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டன. அவற்றில் வெற்றி பெற்ற மாணவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தும்பன் கேணியில் அமைக்கப்பட்ட அன்னை பூபதியின் ஞாபகார்த்த மேடையில் வைத்து பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை —

அன்னை பூபதி நினைவு நாள் மட்டக்களப்பு பாடசாலைகளிலும் கொண்டாடப்பட்டது கடந்த 14 ஆம் திகதி மட்டக்களப்பு கண்ணகி மகா வித்தியாலயத்தில் அன்னை பூபதி நினைவாக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. (உ-த)

## கலந்துரையாடல்

''யாழ் மாவட்டத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுக்கிடையே அபிவிருத்திக்கான சுகாதாரம்'' என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள றெட்பானா அலுவலகத்தில் நடைபெறும்.

சுகாதாரப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற உள்ள இக் கருத்தரங்கில் யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் சி. என். நச்சினார்க்கினியன், யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் ஆகியோர் உட்படப் பலர் கருத்துரை வழங்குவர். [இ-5]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் தெய்வநாயகி வைத்திலிங்கம்

மலர்வு: 09—07—1935 உதிர்வு: 23—03—1992

எங்கள் அன்புத் தெய்வமே அம்மா!

தந்தை தரணியை விட்டு ஏகினாலும்
எங்களுக்காகவே வாழ்ந்து எமையெல்லாம்
வாழ வைத்து ஒளியைத் தேடித்தந்த – தங்கள்
இல்லறத்தை ஆண்டவனே நயந்து வியந்ததாலோ - அல்லது
தாங்கள் அப்பாவின் மீது கொண்ட பேரன்பினாலோ
அப்பா தெய்வமாகிய பதினெட்டாவது ஆண்டின்
அதே நாள் அதே மாதத்தில் தாங்களும் தெய்வமாகி
எங்களைக் கதறவைத்தீர்களே அம்மா!

சிவன்கோவில் வீதி;
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

தங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
உடன்பிறப்புக்கள்.

(20669)

# 7 படையினர் காயம்

கொழும்பு, ஏப். 22 திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர் என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய இன்னொரு தாக்குதலில் ஒரு பொலீஸ்காரர் படுகாயமடைந்தார் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## கடற் போர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
நிரப்பிய படகுகளினால் தாக்கி அழிக்கப்பட்டன.

விடுதலைப் புலிகள் தமது கடற்போர் வல்லமையைப் பெருக்குவதற்காக தமது சக்தியையும், வளங்களையும் தக்கபடி பயன்படுத்தி வருகின்றனர்.

இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட விசைப் படகுகளை அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள் இவ சிறிய படகுகளாதலால் அரச கடற்படைகளின் இராணுவ 'ராடார்' திரையில் அவை தென்படுவதில்லை இந்தப் படகுகள் ஆழ்கடலில் வலிமையுடன் செயற்படக்கூடியவை என்பது குறிப்பிடத்தக்கது.

புலிகள் தமக்குத் தேவையான ஆயுதங்கள், மருந்துகள் போன்றவற்றைக் கொண்டு வர பாக்குநீரிணையை பல ஆண்டுகளாகப் பாவித்து வருகின்றனர். இப்போதும் அது தொடர்ந்து வருகிறது.

பாக்குநீரிணையில் புலிகளின் போக்குவரத்தைத் தடுத்து நிறுத்தும் விடயத்தில் இலங்கைக் கடற்படையுடன் இந்தியக் கடற்படை இப்போது ஒத்துழைத்து வந்தாலும் அவற்றால் போக்குவரத்தைத் துண்டிக்க முடியவில்லை; விடுதலைப் புலிகளை வெல்லமுடியவில்லை

இந்திய - இலங்கை கடற்படையினரின் கண்காணிப்பு இருந்த போதிலும் புலிகள் தமது கடற்போக்குவரத்தை விரிவுபடுத்தி வருகிறார்கள் — என்று தெரிவிக்கப்பட்டது [அ-10]

## படையினரால்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
மீனவர்கள் தொழில் செய்து கொண்டிருந்த போது அவர்களை நெருங்கி வந்த கடற்படையினர் அவர்களை நோக்கி கண்டபடி சுட்டனர். எல்லோரையும் கடலில் குதிக்குமாறும் இல்லையேல் சுட்டுக் கொல்லப் போவதாகவும் மிரட்டினர் என்றும் அறியவருகிறது.

மீனவர்கள் படகுகளில் இருந்து கடலில் குதித்ததும் படையினர் படகுகளில் இருந்த இயந்திரங்களைக் கழற்றிக் கொண்டு அவற்றை நீரில் மூழ்கடித்ததாகச் சொல்லப்பட்டது.

மீனவர்கள் நீண்ட தூரம் நீந்திக் களைத்துச் சோர்ந்து உயிருக்குப் போராடி தத்தளித்துக் கொண்டிருந்த போது, மீட்பு வள்ளங்கள் சென்றதால் 22 பேரும் உயிருடன் திரும்ப முடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பிச்சை செல்லத்துரை [33 வயது] என்பவரின் சடலம் கடலில் மிதந்து கொண்டிருப்பதாக மீட்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர். இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தையாவார்.

பருத்தித்துறை முனையைச் சேர்ந்த மத்தியாஸ் அருள் ஞானயோகம், ஆரோக்கியநாதர் வரப்பிரகாசம், செபஸ்தியாம்பிள்ளை சேக்ஸ்பியர் ஆகிய மூவருமே இன்னும் கண்டுபிடிக்கப்படாதவர்கள் ஆவர். திங்கட்கிழமை உமாபதி சிவராசா என்பவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது தெரிந்ததே. (அ-144-165)

# மருதனார் மடத்திலிருந்து மேதினப் பேரணி புறப்படும்

யாழ்ப்பாணம், ஏப். 22 மேதினத்தை ஒட்டி நடைபெறும் எழுச்சிமிகு பேரணி மருதனார்மடம் சந்தியிலிருந்து ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேதினப் பேரணிக்காக பதாகைகள், சுவரொட்டிகள், சுலோகங்கள் தயாரிப்பதில் தொழிற் சங்கங்கள் முழு முனைப்புடன் ஈடுபட்டுள்ளன.

இராணுவக் கெடுபிடிகளையும், தற்போதைய போர்க்கால நிகழ்வுகளையும் சித்திரிக்கும் கலை வடிவங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

வடமராட்சியில் உள்ள உள்ளூராட்சி ஊழியர்கள், சுகாதாரப்பகுதி பணியாளர்கள், வங்கி அலுவலர்கள் ஆகியோர் நேற்று ஒன்று கூடி மேதின ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்தனர். [உ]

# வாகன அணி மூலம் இன்று நோயாளிகள் காங்கேசனுக்கு

யாழ்ப்பாணம், ஏப், 22 யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை முடித்துக் கொண்ட 12 நோயாளர்கள் இன்று வாகன அணி மூலம் காங்கேசனுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

அங்கிருந்து கடற்படைப் படகு மூலம் தீவுப்பகுதிக்கு அவர்கள் கொண்டு செல்லப்படுவர்.

கடந்த திங்கட்கிழமையும் ஒரு தொகுதி நோயாளர்கள் அங்கு சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. [இ-3]

# உதவி மருத்துவ சேவை தொழில்நுட்ப பரீட்சைகள்

கொழும்பு, ஏப். 22 உதவி மருத்துவ சேவை மற்றும் நடுத்தர தொழில் நுட்பசேவை பரீட்சைகள் நாடு முழுவதிலும் இம் மாதம் 25 ஆம் திகதி நடத்தப்படும்.

இதற்கு 21 ஆயிரம் பேர் தோற்றுகின்றனர்.

ரயில்வே திணைக்களத்தில் உதவித் தொழிலாளர் பரீட்சை இம் மாதம் 24 ஆம் திகதி நடத்தப்படும் 10 ஆயிரம் பேர் இப் பரீட்சைக்குத் தோற்றுவர்.

அரசாங்க சேவை தொழில் நுட்ப உத்தியோகத்தர் பரீட்சை கொழும்பில் மாத்திரம் இம்மாதம் 24 ஆம் திகதி நடத்தப்படும். 2,250 பேர் இப் பரீட்சைக்குத் தோற்றுவர்.

பரீட்சை ஆணையாளர் ஆர்தர்வெதமுல்ல இத்தகவல்களை வெளியிட்டார். (இ-எ]

## இன்று...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
பகலில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பௌத்த பிக்குகள் தங்கியிருக்கும் 4 நாட்களும் குடாநாட்டில் தாக்குதல் நிறுத்தத்தை படையினரும், புலிகளும் கடைப்பிடிப்பர் எனத் தெரியவந்தது.

இது குறித்து உத்தியோக பூர்வமான அறிவித்தல் எதுவும் இருக்காதாயினும் இருதரப்பினரும் தாக்குதல் நிறுத்தத்தை மேற்கொள்ள இணக்கம் தெரிவித்திருப்பதாகச் சொல்லப்பட்டது

தூதுக் குழுவினர் செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு அதிகாரிகளையும் சந்திப்பர். [அ-த 3]

## காணாமற் போன...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும், காணாமற் போனவர்களின் உறவினர்களும் தமது சொந்த முயற்சியில் கடலில் தேடுதல் நடத்திய போதே நீந்திக் களைத்துத் தத்தளித்துக் கொண்டிருந்த 22 மீனவர்களும் மீட்கப்பட்டனர். [அ-144]

## மரண அறிவித்தல்

### செல்வி பாறுவதி வல்லிபுரம்

[முன்னைநாள் ஆசிரியை, இராமநாதபுரம் மகா வித்தியாலயம்]

புலோலி மேற்கு வத்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இல. 328, இராமநாதபுரத்தை வதிவிடமாகக் கொண்டவருமான செல்வி பாறுவதி வல்லிபுரம் 16 4-92 வியாழக்கிழமை அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற திருமதி அருந்தவநாயகம் சிதம்பரம் [இளைப்பாறிய ஆசிரியை, இராமநாதபுரம்], வ. ஆறுமுகம் [திக்கம்], வ. தியாகராசா [திக்கம்] ஆகியோரின் சகோதரியும், பெ. சிதம்பரம் [இளைப்பாறிய ஆசிரியர், இராமநாதபுரம்], திருமதி ஆ. நல்லம்மா [திக்கம்], திருமதி தி. கலைஞானசவுந்தரி [திக்கம்] ஆகியோரின் மைத்துனியும், திருமதி சி. சிவயோகம் [ஆசிரியை, இராமநாதபுரம் ம. வி.], சி. சிவகுமார் [சட்டத்தரணி, லண்டன்], செல்வி சி சிவனேஸ்வரி [ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி], சி. சிவபாலன் [உரிமையாளர், கலசி புகைப்பட சேவை, யாழ்ப்பாணம்] ஆகியோரின் சித்தியும், ஆ. சுதர்சன் [வர்த்தகபீடம், யாழ். பல்கலைக்கழகம்], செல்வி தி சரஸ்வதி, தி. நீதிராஜா, தி நித்தியராஜா, தி. சத்தியராஜா, சி. சிவலோகநாதன் [C. T. B., கிளிநொச்சி], திருமதி சி. பாலாம்பிகை [லண்டன்] ஆகியோரின் மாமியும், செல்வி சி அகல்யாவின் [லண்டன்] அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-4-92 ஞாயிற்றுக் கிழமையன்று இராமநாதபுரத்தில் நடைபெற்றன என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல் :

328, இராமநாதபுரம், கிளிநொச்சி.

சி. சிவபாலன் [பெறாமகன்]

[20668]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22 - 4 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org